[10th August 1963

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் தலைவர் அவர்களே, சம்பந்தப்பட்ட அபேட்சகர் இரண்டாம் தரத்தை உடையவர் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. வந்த விண்ணப்பங்களில் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் எவரேனும் உண்டா, முதல் தரத்தில் வெற்றி பெற்றவர்கள் எவரேனும் உண்டா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றிய தகவல் என்னிடம் இல்லை. பப்ளிக் சர்வீஸ் கமிஷன் இதையெல்லாம் ஆராய்ந்து முடிவு செய்திருக்கிறார்கள். பப்ளிக் சர்வீஸ் கமிஷன் இதை ஆராய்ந்து முடிவு செய்வதற்கு அவர்களுக்கு உதவி அளிப்பதற்காக இதிலே தேர்ச்சி பெற்றவர்கள் இரண்டு பேர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஒருவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் 'ஸ்பெஷலிஸ்டு இன் டமில்' திரு. ஜி. சுப்பிரமணியப் பிள்ளை. மற்றொருவர் சென்னை பல்கலைக்கழகத்தின் சார்பாக டாக்டர் வரதராசனார். இருவரும் இருந்து, நம்முடைய கல்வி இலாகாவைச் சார்ந்த ஒருவரும் இருந்து எல்லோரும் ஏகமனதாக இந்த முடிவு செய்திருக்கிறார்கள். இதை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது.

மாணிக்கஸ்வாமி தேவஸ்தானம்

* *85 **கேள்வி.—திரு. கோ. சி. மணி :*** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கும்பகோணம் தாலூகா, சிவபுராணி கிராமம், மாணிக்கஸ்வாமி தேவஸ்தானத்துக்குச் சொந்தமான நஞ்சை, புஞ்சை நிலங்களை அதன் மானேஜிங் டிரஸ்டி சுமார் ஐந்து வருடங்களுக்குள் அந்நிலங்களில் விற்பனை செய்துள்ளாரா ?

(இ) அப்படியானால் மொத்தம் எவ்வளவு நிலம் விற்கப் பட்டுள்ளது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes, and

(*b*) 5·13 acres of lands have been sold during the last ten years.

திரு. கோ. சி. மணி : தேவஸ்தானங்களுக்குச் சொந்தமான நிலங்களை மானேஜிங் டிரஸ்டி விற்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த ஆலயங்கள் அறநிலைய இலாகாவின் மேற்பார்வைக்கு வந்தது 1961-ல் தான். இந்த நிலங்கள் விற்கப்பட்டது எவ்வளவு தூரம் நியாயம் என்பதையெல்லாம் பரிசீலனை செய்து தகுந்த நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவதற்கு நிர்வாக அதிகாரிகள் கவனம் செலுத்திவருகிறார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆலயங்களில் பக்தி என்ற பெயரால் இப்படிப்பட்ட மோசடிகள் நடப்பதைத் தடுப்பதற்கு அறநிலையப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் சரியான விதிமுறைகள் இருக்கின்றனவா ? 1961-ம் ஆண்டில் ஆலயம் அறநிலைய இலாகாவின் மேற்பார்வையின்கீழ் வந்தது என்று சொல்லுகிறார்கள். இந்த மோசடியைத்தவிர, இதற்கு முன்பு இப்படி மோசடிகள் நடைபெற்றனவா, இல்லையா ?

10th August 1963]

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதிலே மோசடி இருப்பதாக இன்னும் ஏறபடவில்லை. சிறு, சிறு கோவில்கள் அறநிலையப் பாது காப்பு இலாகாவின் கீழ் வாராதவை பரிசீலனை செய்யப்பட்டு, இந்த இலாகாவின் கீழ் சேர்க்கப்படுகின்றன. அப்படிச் சேர்க்கப்பட்டிருக்கிறது என்றால், அதற்கு முன்பு மோசடி நடந்தது என்று எடுத்துக்கொள்வதற்கில்லை. ஏதாவது தவறு நடந்தால், சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தச் சட்டம் போதாது என்று அங்கத்தினர்களுக்குப்பட்டால், அவர்கள் வேறு சில யோசனைகள் திருத்துவதற்குக் கொடுக்கலாம்.

திரு. சா. கணேசன்: இம்மாதிரி ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களையோ அல்லது வேறு ஸ்தாவர சொத்துக்களையோ விற்கின்றபொழுது, அதனால் பெறுகின்ற பணத்தை மீண்டும் இது மாதிரி ஸ்தாவர சொத்துக்களிலேயே போட்டு அதனுடைய வருமானத்தை அந்த ஸ்தாபனங்கள் பயன்படுத்தவேண்டும் என்ற வரையறை உண்டா? இல்லாவிட்டால், அப்படிப்பட்ட வரையறையை ஏற்படுத்த அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. எம் பக்தவத்சலம்: ஸ்தாவர சொத்துக்களை விற்க வேண்டும் என்ற நிமித்தம் ஏற்பட்டால், அறநிலையப் பாது காப்பு இலாகாவின் அங்கீகாரத்தின் பேரில்தான் விற்பதற்கு அனுமதிக்கப்படுகிறது. அப்படி அனுமதி இல்லாமல் விற்றால், அது செல்லாது. அப்படி விற்கவேண்டிய நிமித்தம் ஏற்பட்டு, விற்றால், அதில் கிடைக்கின்ற பணத்தை எந்தவிதமாக மீண்டும் இன்வெஸ்டு செய்வது என்பது குறித்து, குறிப்பாக ஸ்தாவர சொத்துக்களில் தான் இன்வெஸ்டு செய்யவேண்டுமென்ற வரையறை ஏற்படுத்துவது காரிய சாத்தியமாக எப்பொழுதும் இருக்காது. ஆகையினால் அறநிலையப் பாதுகாப்பு இலாகா அதை கவனித்து எந்த வகையிலே இன்வெஸ்டு செய்வது என்று உத்திரவிடுகிறார்கள்.

திரு. கே. ஏ. மதியழகன்: தேவஸ்தானங்கள், மடாலயங்கள் இப்படிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு இருக்கிற சொத்துக்களை அதனுடைய கர்த்தாக்கள் பாரதீனப் படுத்துவதைத் தவிர்ப்பதற்காக திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் புதியதாக சட்டம் கொண்டுவரவேண்டும் என்று தன்னிடம் கலந்து பேசியதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது சம்பந்தமாக ஏதாவது சட்டம் வருமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இதைப் பற்றி ஸ்ரீ லால்பகதூர் சாஸ்திரியிடம் பேச வேண்டிய நிமித்தம் இல்லை. மத்திய அரசாங்கம் ஒரு கமிஷனை நியமித்தார்கள். அந்தக் கமிஷன் ஆராய்ந்து சில சிபாரிசுகளைச் செய்திருக்கிறது. அதை ஒட்டி சட்டம் வரும் என்று எதிர்பார்க்கலாம். அந்தச் சட்டத்தை சீக்கிரம் இயற்றுங்கள் என்று மட்டும் மத்திய அமைச்சரிடம் சொல்லி இருக்கிறேன். ஆனால் நம்முடைய மாகாணத்தைப் பொருத்த வரையில் அந்தச் சட்டத்திற்கு அவசியம் இல்லை என்று சொல்லலாம். இங்கே நிறைவேற்றப்பட்டிருக்கிற சட்டத்தை ஒட்டித்

[10th August 1963

தான் மத்திய ஆட்சியில் செய்யப் போகிறார்கள். இங்கே இருக்கிற சட்டத்தின் கீழ் எல்லா நடவடிக்கைகளும் எடுத்துக் கொள்ளப் பட்டு வருகிறது.

திரு. கோ. சி. மணி : இந்த மாணிக்கஸ்வாமி தேவஸ்தானத்தின் டிரஸ்டி விற்ற நிலத்திற்குப் பதிலாக வேறு ஏதாவது ஸ்தாவர சொத்தையோ அல்லது இதர சொத்தையோ வாங்கியிருக்கிறார் என்று பரிசீலனையிலிருந்து தெரிய வருகிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அற நிலையப் பாதுகாப்பின்கீழ் வந்த பிறகு இதைப் பரிசீலனை செய்யும்படி நிர்வாக அதிகாரிக்கு உத்திரவிடப்பட்டிருக்கிறது. பரிசீலனை செய்து வருகிறார் என்று கூறினேன். அதற்கு மேல் என்னிடம் தகவல் இல்லை.

Madurai Municipal Council (increase of seats)

* 86 Q.—SRI K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Municipal Administration be pleased to state—

(*a*) whether the Government have taken any decision regarding the representation of Madurai Municipal Council to increase the number of seats in the Council on population basis; and

(*b*) if so, the decision taken thereon?

THE HON. SRI S. M. A. MAJID : (*a*) & (*b*) No.

(அ) & (இ) : இல்லை.

திரு. இராம. அரங்கண்ணல் : மதுரை முனிசிபாலிடியை கார்ப்பொரேஷனாக மாற்றும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : அப்படி உத்தேசம் இல்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : பொதுவாக, மதுரை, கோயம்புத்தூர் ஆகிய நகரங்களிலே இருக்கின்ற வார்டுகள் சரியாக இல்லை, இன்னும் அதிகப்படுத்த வேண்டும் என்ற கருத்தை இந்த அமைச்சரவை ஏற்றுக் கொள்கிறதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : வார்டுகள் பிரிவினை அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது. இப்பொழுது ஒன்றும் சொல்லுவதற்கு இல்லை.

திரு. சி. பொன்னுசாமி : தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தி வேலை நடந்துகொண்டு இருப்பதனால், அங்கு மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. ஆகவே, அங்கேயுள்ள நகரசபை ஸ்தானங்களை அதிகரிப்பதற்கு உத்தேசம் உண்டா ? அப்படியானால் எப்பொழுது ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : ஏற்கனவே இருக்கிற எம்.டி.எம். சட்டத்தின் 7-வது பிரிவின்கீழ் அதிகபட்சமாக முனிசிபல் கவுன்சிலுக்கு 36 ஸீட்டுகள்தான் கொடுக்கலாமென்ற அடிப்படையில் இருக்கிறது. அந்தச் சட்டத்தைத் திருத்தினாலொழிய 36-க்கு அதிகமாகக் கொடுக்க முடியாது. சட்டத்தைத் திருத்துவது பற்றி சர்க்கார் பரிசீலனையில் இருக்கிறது.